பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 ஆடி 20 வெள்ளிக்கிழமை 05.08.2022 கதிர் 162

## ரணில் - சஜித் அணி இன்று முக்கிய பேச்சு



எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி இன்றுமாலைஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துப் பேச்சு நடத்துகின்றது.

சர்வகட்சி அரசு தொடர்பில்,

☞2

# ஜனநாயகப் போராட்டச் செயற்பாட்டாளர்கள் அனைவரையும் உடனடியாக விடுதலை செய்!

## யாழ். நகரில் முன்னணியின் ஏற்பாட்டில் போராட்டம்

(ஆர். கலையமுதன்)

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர்ஜோசப்ஸ்டாலின்கைதுசெய்யப்பட்டதைக் கண்டித்து யாழ்ப்பாணத்தில் இன்று போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்துக்கு முன்பாக இன்று முற்பகல் 10 மணியளவில் இந்தப் போராட்டம் இடம் பெற்றது.

மக்களின் உரிமைக்காக ஜனநாயக வழியில் போராடும் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலினின்கைதைவன்மையாகக்கண்டிக்கின்றோம், ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்ட ஜனநாயகப்போராட்டச்செயற்பாட்டாளர்கள் அனைவரையும் உடன் விடுதலை செய், ஸ்ரீலங்கா அரசின் பாசிசவாதத்தை எதிர்த்து நாம் தொடர்ந்தும் போராடுவோம் போன்ற பதாகைகளைப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தாங்கியிருந்தனர்.

இதில் நாடாளுமன்ற

☞2




## வருகின்றார் கோட்டாபய!



முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எதிர்வரும் 11 ஆம் திகதி நாடு திரும்புவார் எனத் தெரியவருகின்றது.

சிங்கள இலத்திரனியல் ஊடகம் ஒன்று இந்தத் தகவலை இன்று வெளியிட்டுள்ளது.

☞2

# இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் அமைதியைச் சீர்குலைக்காதீர்கள்!

## அரசுக்குச் சுரேஷ் எச்சரிக்கை

**இந்து சமுத்திரப் பிராந்தியம் எப்போதும் அமைதிப்பூங்காவாகத் திகழவேண்டும் என்பதில் இந்தியா அதிக அக்கறை கொண்டுள்ளது. எனவே, அந்த அமைதி முயற்சியைக் குலைக்கும் விதத்தில் இலங்கையின் வெளியுறவுக் கொள்கை அமைந்துவிடக்கூடாது.**

**- இவ்வாறு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் க.பிரேமச்சந்திரன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

☞2



## ஒரே இரவில் இருவர் சுட்டுப் படுகொலை!



தென்னிலங்கையில் நேற்றிரவு இரு இடங்களில் இருவர் சுட்டுப்படுகொலைசெய்யப்பட்டுள்ளனர்.

லுனுஹம்வெஹர பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் கொல்லப்பட்டார்.

☞2

## ஜோசப் விடுவிக்கப்படும் வரை போராடுவோம்!

### ஆசிரியர் சங்கங்கள் கூட்டாக அறிவிப்பு

பழிவாங்கும் நோக்குடன் கைதுசெய்த இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலினை அரசு உடனடியாக விடுவிக்க வேண்டும்.

– இவ்வாறு ஆசிரியர் சங்கங்கள் கூட்டாக வலியுறுத்தியுள்ளன.


ஜோசப் ஸ்டாலின் விடுவிக்கப்படும் வரைக்கும் நாடெங்கும் நாள்தோறும் எதிர்ப்புப் போராட்டங்கள் முன்னெடுக்கப்படும் என்றும்

☞2




### இலங்கையில் கடவுச்சீட்டு பறிக்கப்பட்ட

## கெய்லி பிரேசருக்கு பிரிட்டன் அரசு உதவி



இலங்கையில் குடிவரவு மற்றும் குடியகல்வு அதிகாரிகளால் கடவுச்சீட்டு கைப்பற்றப்பட்ட ஸ்கொட்லாந்துப் பெண்ணுக்கு இங்கிலாந்து அரசு உதவிகளை முன்னெடுத்துள்ளது.

இலங்கைக்குப் பயணம் செய்ய வழங்கப்பட்ட விசாவைத் தவறாகப் பயன்படுத்தினார் என்று குற்றஞ்சாட்டி கெய்லி

☞2

## துப்பாக்கிச்சூட்டுக் கொலைகள்; பின்புலத்தைக் கண்டறியுங்கள்

### அரசிடம் அநுரபிரியதர்ஷன எம்.பி. வலியுறுத்து

நாட்டில் இடம்பெறும் தொடர் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களின் பின்புலம் தொடர்பில் அரசால் கண்டறியப்பட வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் அநுரபிரியதர்ஷன யாப்பா வலியுறுத்தினார்.

நாட்டில் கடந்த இரு

☞2



### தமிழருக்கான அரசியல் தீர்வைக் கோரி

## 100 நாள்கள் செயல் முனைவு; மட்டு. நகரில் இன்று ஆரம்பம்

'கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வுக்கான மக்கள் குரல்' எனும் தொனிப்பொருளில் இம்மாதம் முதலாம் திகதி வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவால் மன்னாரில் ஆரம்பித்து வைக்கப்பட்ட 100 நாள்கள் செயல்

☞2



### பொதுநலவாய விளையாட்டு;

## மாயமான மூவரில் 2 பேர் கண்டுபிடிப்பு



இங்கிலாந்தின் பேர்மிங்ஹாமில் நடைபெறும் பொதுநலவாய விளையாட்டுப் போட்டியில் 161 பேர் கொண்ட இலங்கையின் மற்றுமொரு தடகள வீரர்

☞2

## சுற்றுலாத்துறை தூதுவரானார் சனத் ஜயசூரிய



இலங்கையின் சுற்றுலாத் துறைத் தூதுவராக கிரிக்கெட் ஜாம்பவான் சனத் ஜயசூரிய நியமிக்கப்பட்டுள்ளார்.

☞2

## வெளிநாட்டுக்குச் செல்வதில் மக்கள் மும்முரம்; 7 மாதங்களில் மட்டும் 6 லட்சம் கடவுச்சீட்டுக்கள்

இலங்கையில் இவ்வருடம் முதல் ஏழு மாதங்களில் சுமார் 6 லட்சம் கடவுச்சீட்டுக்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

இது பொருளாதார நெருக்கடி காரணமாக மக்கள், வெளிநாடுகளுக்கு இடம்பெயர்வதற்கான முனைப்புக்கள் தீவிரமடைந்துள்ளதை எடுத்துக்காட்டுகின்றது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வருடம் இதே காலப்பகுதியில் இலங்கையில் ஒரு லட்சத்து 47

☞2



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## சுற்றுலாத்துறை தூதுவரானார் ..............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ இதனை உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளார்.

புதிய சுற்றுலா ஆலோசனைக் குழுவுடன் இணைந்து நியமனத்தை அறிவிக்கும் சிறப்பு நிகழ்வு நேற்றிரவு இடம்பெற்றது.

சனத் ஜயசூரிய உலகம் முழுவதும் மிகவும் பிரபலமானவர். மேலும் அவர் தானாக முன்வந்து, இந்தியா, பாகிஸ்தான்,

## வெளிநாட்டுக்குச் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆயிரத்து 192 கடவுச்சீட்டுக்களே விநியோகிக்கப்பட்டன.

அந்தவகையில் இந்த வருடத்தின் முதல் ஏழு மாதங்களில் கடவுச்சீட்டு வழங்கல் 33 வீதத்தால் அதிகரித்து 5 லட்சத்து 90 ஆயிரத்து 260 கடவுச்சீட்டுக்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன என்று குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதேவேளை, கடந்த ஜுலை மாதத்தில் ஒரு நாள் மற்றும் சாதாரண சேவை கடவுச்சீட்டுக்காக மொத்தம் ஒரு இலட்சத்து ஆயிரத்து 777 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன.

அதில் 98 ஆயிரத்து 124 பேருக்கு மாத்திரமே கடவுச்சீட்டுக்களை வழங்க முடிந்துள்ளது என்று குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் பிரதிக் கட்டுப்பாட்டாளர் பியுமி பண்டார தெரிவித்துள்ளார்.

திணைக்கள வரலாற்றின்படி, அதிக எண்ணிக்கையிலான கடவுச்சீட்டுக்கள் 2016 இல் விநியோகிக்கப்பட்டுள்ளன.

அந்த ஆண்டில் 6 லட்சத்து 58 ஆயிரத்து 725 கடவுச்சீட்டுக்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

எனவே, இந்த ஆண்டின் ஏழு மாதங்களில் 5 லட்சத்து 90 ஆயிரத்து 260 கட வுச்சீட்டுக்கள் விநியோகிக்கப்பட்டுள்ளமையால், 2016ஆம் வருடத்தின் சாதனை முறியடிக்கப்படவுள்ளது.

இதேவேளை, மத்திய வங்கியின் அண்மைய அறிக்கையின்படி, இந்த ஆண்டின் முதல் 6 மாதங்களில் ஒரு லட்சத்து 40 ஆயிரத்து 701 பேர் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காகச் சென்றுள்ளனர்.

எனினும், 2021ஆம் ஆண்டு முழுவதும் ஒரு லட்சத்து 17 ஆயிரத்து 952 பேர் மட்டுமே வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களுக்காகச் சென்றுள்ளனர்.

## மாயமான மூவரில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காணாமல்போயுள்ளார் என்று வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

காணாமல்போன இந்த மல்யுத்த வீரரை இங்கிலாந்துப் பொலிஸார் தேடி வருகின்றனர்.

கடந்த திங்களன்று, பொதுநலவாய விளையாட்டு கிராமத்தில் இருந்து ஒரு ஜுடோ வீராங்கனையும் இலங்கை ஜுடோ அணியின் மேலாளரும் காணாமல் போயினர்.

இந்தநிலையில் மல்யுத்த வீரர் நேற்று தடகள கிராமத்தை விட்டு வெளியேறினார் என்று இலங்கையின் ஒலிம்பிக் குழு தெரிவித்துள்ளது.

மற்ற இருவரான ஜுடோ வீராங்கனை மற்றும் ஜுடோ அதிகாரி முன்னறிவிப்பின்றி கிராமத்தை விட்டு வெளியேறிய பின்னர் இங்கிலாந்துப் பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, குறித்த மூவருக்கும் ஆறு மாதங்களுக்குச் செல்ல செல்லுபடியாகும் விசாக்கள் உள்ளன. எனவே, அவர்கள் காணாமல்போனதற்கான காரணங்கள் குறித்து எந்தவொரு உறுதியான முடிவுக்கும் வருவது கடினம் என்று பொதுநலவாய விளையாட்டுகளுக்கான இலங்கை அணியின் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

காணாமல்போதல் சம்வங்களை அடுத்து இலங்கை விளையாட்டு வீரர்கள் தற்போது கடவுச்சீட்டு மற்றும் ஏனைய பெறுமதியான பொருள்களைப் பாதுகாப்புக்காக அந்தந்த விளையாட்டுத் துறை அதிகாரிகளிடம் ஒப்படைத்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

பங்களாதேஷ் மற்றும் மாலைதீவுகளை இலக்காகக் கொண்ட இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு நிகழ்வுகளில் ஒரு பகுதியாக இருக்க ஒப்புக்கொண்டார் – என்று சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

## துப்பாக்கிச்சூட்டுக் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாதங்களுக்குள் 21 துப்பாக்கிச்சூட்டு சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இதில் 23 பேர் கொல்லப்பட்டுள்ளனர். சிலர் காயமடைந்துள்ளனர்.

இந்நிலையிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் இவ்வாறு வலியுறுத்தினார்.

உரிய விசாரணையை முன்னெடுத்து, உண்மையைக் கண்டறிய வேண்டிய பொறுப்பு பொலிஸாருக்கு உள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

## 100 நாள்கள் செயல் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முனைவு செயற்பாட்டின் 5ஆம் நாள் வேலைத்திட்டம் மட்டக்களப்பு மாவட்டத்தில் இன்று ஆரம்பித்துவைக்கப்பட்டது.

இம்மாவட்டத்துக்கான முதலாவது வேலைத்திட்டம் இன்று காலை மட்டக்களப்பு நகரின் காந்தி பூங்காவில் நடைபெற்றது.

இந்தச் செயல் முனைவில் கலந்து கொண்ட தமிழ், முஸ்லிம் மக்கள், தமிழ் பேசும் மக்களுக்கான அரசியல் தீர்வுக்கான கோரிக்கை உள்ளிட்ட பல்வேறு கோஷங்களை எழுப்பி பேரணியாகச் சென்றதுடன், பதாகைகளையும் ஏந்தியிருந்தனர்.

பேரணியின் நிறைவில், அடிப்படை உரிமைகள் குறித்த வீதி நாடகம் நிகழ்த்தப்பட்டது. இதன்போது கருத்துச் சுதந்திரம், ஒன்றுகூடும் சுதந்திரம், நடமாடும் சுதந்திரம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து விளக்கங்கள் அளிக்கப்பட்டதுடன் பொதுப்பிரகடனமும் வாசிக்கப்பட்டது.

அதேநேரம், அரசியல் தீர்வு தொடர்பான கருத்துக்களும் பொதுமக்களிடமிருந்து சேகரிக்கப்பட்டன. அத்துடன், இச்செயல் முனைவின் அறிக்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளரிடம் கையளிக்கப்பட்டது.

மன்னாரில் ஆரம்பிக்கப்பட்ட இந்த வேலைத்திட்டம் இதுவரை, கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை ஆகிய இடங்களில் நடைபெற்றுள்ளது. நாளை யாழ். மாவட்டத்தின் நாவற்குழியில் நடைபெறவுள்ளது.

## கெய்லி பிரேசருக்கு .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரேசரின் கடவுச்சீட்டை இலங்கையின் குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் கையகப்படுத்தியுள்ளது.

மருத்துவ காரணங்களுக்காகவே பிரேசருக்கு இலங்கை வருவதற்கு விசா வழங்கப்பட்டது.

எனினும், அவர் காலிமுகத்திடலில் அரசுக்கு எதிரான போராட்டங்களை ஊக்குவிக்க விசாவைப் பயன்படுத்தினார் என்று குற்றஞ்சாட்டப்பட்டது.

இதையடுத்து ஸ்கொட்லாந்து நகரான அபெர்டீனைதளமாகக்கொண்ட தொழிலாளர் நல மையம், ஸ்கொட்லாந்து அரசுடன் இணைந்துகெய்லிபிரேசரின்பாதுகாப்பை உறுதிசெய்யவும், அவரது மனித உரிமைகளைப் பாதுகாக்கவும் இலங்கை அரசுடன் தொடர்களை ஏற்படுத்தியுள்ளது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தநிலையில், கெய்லியின் உயிருக்கு ஆபத்து ஏற்படக்கூடும் என்பதால் உடனடியாக அவரை இலங்கையில் இருந்து வெளியேறுமாறும் கோரப்பட்டுள்ளது.

அத்துடன் அவரது கடவுச்சீட்டை மீளப்பெறவும், அவர் பிரிட்டனுக்குத் திரும்பும் வரை இலங்கையில் அவரது பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்பதை அறிந்துகொள்ளும் முகமாக பிரிட்டன் தூதுவர் சாரா ஹல்டனுக்கு நேற்று அபெர்டீனை தளமாகக் கொண்ட தொழிலாளர் நல அமைப்பு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

## ஜோசப் விடுவிக்கப்படும் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆசிரியர் சங்கங்கள் அறிவித்துள்ளன.

இலங்கை ஆசிரியர் சங்கம், இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் மற்றும் இலங்கை மக்கள் ஆசிரியர் சங்கம் என்பன கூட்டாக மேற்படி அறிவித்தலை விடுத்துள்ளன.

இதேவேளை, இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலினை எதிர்வரும் 12ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

கொழும்பு – கோட்டை நீதிவான் நீதிமன்றம் இந்த உத்தரவை நேற்று மாலை பிறப்பித்துள்ளது.

நீதிமன்ற உத்தரவையும் மீறி அண்மையில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டின் பேரில் ஜோசப் ஸ்டாலின் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டார்.

இந்தநிலையில் அவரின் கைதைக் கண்டித்து உள்ளூர் மற்றும் வெளிநாடுகளின் மனித உரிமை அமைப்புக்கள் தமது கண்டனங்களை வெளியிட்டுள்ளன.

## ஒரே இரவில் இருவர் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் சம்பவத்தின்போது 34 வயதான நபரே கொல்லப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்தது.

இதேவேளை, காலி – அஹுங்கம கொவியாபான பகுதியில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றது.

இதன்போது 40 வயதுடைய நபர் கொல்லப்பட்டார். மேலும் ஒருவர் படுகாயமடைந்தார்.

மேற்படி இரு இடங்களிலும் துப்பாக்கிச்சூடு மேற்கொள்ளப்பட்டமைக்கான காரணம் வெளிவராத நிலையில், பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## வருகின்றார் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் ஜனாதிபதி பதவியை வகித்த கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராக மக்கள் எழுச்சி வெடித்தது. கடந்த ஜுலை 09 ஆம் திகதி ஜனாதிபதி மாளிகை முற்றுகையிடப்பட்டது.

இதையடுத்து ஜுலை 13 ஆம் திகதி நாட்டிலிருந்து ஜனாதிபதி வெளியேறினார். மாலைதீவு சென்ற அவர், அங்கிருந்து சிங்கப்பூர் புறப்பட்டார். ஜுலை 14 ஆம் திகதி இராஜிநாமாக் கடிதத்தை அனுப்பி வைத்திருந்தார்.

இந்நிலையிலேயே அவர் எதிர்வரும் 11ஆம் திகதி நாடு திரும்புகின்றார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கோட்டாபய ராஜபக்ஷ நாடு திரும்பினால் முன்னாள் ஜனாதிபதி என்ற வகையில் அவருக்குத் தேவையான பாதுகாப்பு உள்ளிட்ட வசதிகளை அரசு செய்துகொடுக்கும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் எம்.பி. தெரிவித்துள்ளார்.

## ஜனநாயகப் போராட்டச் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன் உள்ளிட்ட தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் உறுப்பினர்கள் மற்றும் யாழ்ப்பாணம் பல்கலைக் கழக ஊழியர் சங்கத்தின் பிரதிநிதிகள் ஆகியோர் பங்கேற்றனர்.

## ரணில் - சஜித் அணி ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதியுடன் பல்வேறு அரசியல் கட்சிகள் பேச்சு நடத்தி வருகின்றதுடன், கட்சிகளுக்குள்ளே உள்ளக கலந்துரையாடல்களும் இடம்பெற்று வருகின்றன.

இவ்வாறான பின்னணியில், எதிர்க் கட்சித் தலைவர் உள்ளிட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் குழுவினர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை இன்று மாலை சந்தித்துப் பேச்சு நடத்துகின்றனர்.

இதன்போது சர்வகட்சி அரசு தொடர்பில் இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

## இந்து சமுத்திரப் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சீன உளவுக் கப்பலின் வருகை குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–

சீனாவின் உளவுக் கப்பல் ஒன்று இலங்கையின் அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு எதிர்வரும் 11ஆம் திகதி வரவிருப்பதாகவும், ஏறத்தாழ ஒருவாரம் இங்கு தங்கியிருந்து ஆய்வுகள் செய்யஇருப்பதாகவும் ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இந்த உளவுக் கப்பலானது கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைகளைக் கண்காணிப்பதுடன், செய்மதிகள் அனுப்புவது போன்றவற்றைக் கண்காணிக்கும் திறன் கொண்டதுமாகும். மேலும், இந்தக் கப்பலைச் சுற்றி 750 சதுர கிமீ பரப்பளவிற்கு சகலவற்றையும் கண்காணிக்கும் தொழில்நுட்பத் திறன்களையும் கொண்டது.

இலங்கை என்பது இந்தியாவுக்கு மிக அண்மித்த நாடாக இருக்கின்றது.குறிப்பாக இந்தியாவின் பாதுகாப்பு எல்லைப்

(08ஆம் பக்கம் பார்க்க)


## ஆதனப் பெயர்மாற்றம்

யாழ் மாநகரசபைக்குட்பட்ட யாழ்ப்பாணம் வட்டாரம் – 22 காரைக்காட்டு 2ம் ஒழுங்கை ஆதன இல 13/1 ஐக் கொண்ட ஆதனம் வீ.இரத்தினசபாபதி பெண் நாகேஸ்வரி என ஆதனப் பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனத்தை பிரசித்த நொத்தாரிசு சி.விஸ்வலிங்கம் முகதாவில் 13.01.2004ஆம் திகதியிடப்பட்ட 1022 ம் இலக்க வெளிப்படுத்தல் உறுதி மூலம் சோமசுந்தரம் கைம்பெண் லட்சுமி இவ் ஆதனம் தானும் தனது பெற்றோரும் கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு மேலான உறுதிப்படியும் பிசகு தடையற்ற ஆட்சிப்படியும் சொந்தக்காரராக இருந்து வருகிறோம் என வெளிப்படுத்தியுள்ளார்.

ஆதன இடாப்பு:– வட மாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று வண்ணார் பண்ணை மேற்கு இறை முடவேம்படி நிலப்பரப்பு இரண்டு குழி ஏழு தசம் நான்கு ஏழும் (நில பரப்பு 2 குளி 7.47) உம் வீடும் கிணறும்

கிழக்கு – காராளசிங்கத்திற்கும் பெண் இராஜேஸ்வரிக்கும்

வடக்கு – ஒழுங்கை

மேற்கு – ஒழுங்கை

தெற்கு – சிவஞானத்திற்கும் பெண் சுசிலாவுக்கும் உரிய ஆதனம்

தற்போது இவ்வாதனம் சோமசுந்தரம் கைம்பெண் லட்சுமி என்பவரால் தனது பெயரிற்கு பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. எனவே இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிபடுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது சோமசுந்தரம் கைம்பெண் லட்சுமி என்னும் பெயருக்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

முதல்வர்
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## நாடாளுமன்றமே அரசாங்கமாக!

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையைக் கொண்ட ஒரு தரப்பு அல்லது ஒரு கட்சி அமைப்பது அரசாங்கம் என்றாலும் அந்த ஆளும் தரப்புக் குழு முழுமையாக அரசாங்கமாகச் செயற்படுவதில்லை.

அந்த அரசின் தலைவரான ஜனாதிபதி மற்றும் பிரதமர், இந்த இருவரையும் சுற்றி இருக்கும் அமைச்சரவை ஆகியவையே பெரும்பாலும் ஓர் அரசாங்கக் கட்டமைப்பாகச் செயல்படுவதுண்டு. இதற்கு புற நடையாக இலங்கையை பொறுத்தவரை நிறைவேற்று அதிகார ஜனாதிபதியைச் சூழ நிற்கும் ஒரு குழு ஓர் அரசாங்கம் போல தன்னைக் கருதி செயற்படுகின்றமையைப் பல சந்தர்ப்பங்களில் கண்டிருக்கிறோம்.

கடைசி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வரை இந்த நிலைமை தொடர்ந்தது.

இப்போதும் – இன்றுவரை – ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சி அதிகாரத்தின் கீழும் அரசாங்கம் என்பது அப்படித்தான் ஒரு குழுவைச் சுற்றிக் கட்டமைந்திருக்கின்றமையைக் காண்கின்றோம்.

இந்த முறைமையைத் தாம் மாற்றி அமைக்கப் போகின்றார் என்கிறார் புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

முழு நாடாளுமன்றத்தையுமே அரசாங்கமாக மாற்றி, நாட்டைக் கட்டி எழுப்பும் தீர்மானங்களை எடுப்பதே தமது சர்வகட்சி அரசாங்கத்தின் நோக்கம் – திட்டம் – என்கிறார் அவர்.

அதாவது, அரசாங்கம் என்பது தனித்து ஒரிருவரை அல்லது ஒரிரு கட்சிகளைச் சூழ்ந்த கட்டமைப்பு என்ற நிலைமையை மாற்றி, நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சகல கட்சிகளாலும் சூழப்பட்டதாக அதை மாற்றுவதே அவரின் உத்தேசம்; நோக்கம்.

அதாவது அரசாங்கத்தின் பங்குதாரர்களாக – அதன் தீர்மானங்களை மேற்கொள்ளும் தரப்புகளாக – நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் ஒவ்வொரு கட்சியையும் பொறுப்பாக்குவதே அவரின் உத்தேச இலக்கு.

நல்ல விடயம்தான்.

இப்படி முழு நாடாளுமன்றத்தையும் ஒரு பணிக் குழுவாக பொறுப்புடைமையாக்கும் அவரது இத்திட்டம் புதியதல்ல. நல்லாட்சி அரசின் காலத்திலும் இப்படியே முழு நாடாளுமன்றத்தையுமே புதிய அரசமைப்பு உருவாக்க சபையாக மாற்றியவர் அந்த அரசின் பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்கதான். அந்த அரசமைப்பு உருவாக்க சபை தனது பணியை முன்னெடுப்பதற்கு அப்போதைய பிரதமரான அவரது தலைமையில், வழிகாட்டல் குழு ஒன்றையும் உருவாக்கியது. அந்த வழிகாட்டல் குழு தனது பணிக்கு தேவையான உபகுழுக்களை அமைத்தது. வழிகாட்டு குழுவின் 90 கூட்டங்களை – மரதன் அமர்வுகளை – ரணிலே தலைமை வகித்து நடத்தினார். அதன் பெறு பேறாக காத்திரமான – புதிய அரசமைப்பு நகலுக்குரிய – யோசனை திட்டத்தை அவரால் முன்வைக்க முடிந்தது. அது தொடர்ந்து நகர்ந்து வெற்றிக்கனியை எட்ட முன்னர் நல்லாட்சி கெட்டு உள்வீட்டுக் குழப்பத்தில் அந்த முயற்சி இறுதிக் கட்டத்தில் சீரழிந்து போனது.

இப்போதும் முழு நாடாளுமன்றத்தையும் ஓர் அரசாங்கமாக மாற்றும் அவரின் முயற்சி கோட்பாட்டியல் ரீதியில் சாலவும் நல்லதுதான். ஆனால் யதார்த்தத்தில் – செயல் உருவத்தில் – அது சாத்தியமானதா என்பது சந்தேகத்திற்குரியதே.

இருபது, இருபத்தி ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட ஓர் அமைச்சரவையையே கூட்டாக வழி நடத்துவதில் பெரும் நெருக்கடி இருக்கும்போது, முழு நாடாளுமன்றத்தையுமே ஓர் அரசாங்கமாக மாற்றிச் செயல் படுத்துவது என்பது மணலைக் கயிறாகத் திரிக்கும் சிக்கலான விவகாரம். எப்படிச் செய்யப் போகிறார் புதிய ஜனாதிபதி ரணில்? பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

# பொலிஸார் விடுத்த அறிவுறுத்தலுக்கு எதிராக அடிப்படை உரிமை மனுக்கள்

காலிமுகத்திடலில் இருந்து போராட்டக் குழுக்களை வெளியேறுமாறு பொலிஸார் விடுத்த அறிவுறுத்தலுக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றில் நான்கு அடிப்படை உரிமை மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

காலிமுகத்திடல் மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் அனுமதியின்றி தங்கியுள்ள அனைவரையும் அங்கிருந்து வெளியேறுமாறு பொலிஸார் அறிவித்துள்ளனர்.

குறிப்பாக இன்று (வெள்ளிக்கிழமை) மாலை 5 மணிக்கு முன்னர் மேற்படி பகுதிகளில் இருந்து வெளியேறுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையிலேயே வெளியேறுமாறு பொலிஸார் விடுத்த அறிவுறுத்தலுக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றில் நான்கு அடிப்படை உரிமை மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இதேவேளை, நுகே கொடையில் நாளை (சனிக்கிழமை) பாரிய மக்கள் பேரணி ஒன்றை நடத்த காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டக்காரர்கள் தீர்மானித்துள்ளனர்.

அடக்குமுறை, அவசரகாலச் சட்டம் உள்ளிட்ட பல பிரச்சினைகளுக்கு எதிராக இந்தப் பேரணி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நுகேகொட ஆனந்த சமரகோன் திறந்த வெளி அரங்கு பீடத்தை மையமாக கொண்டு ஆரம்பமாகவுள்ள இந்த பொது பேரணியில் தொழில்சார் சமூகங்கள், பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான பிக்குகள் பேரவை, சிவில் அமைப்புக்கள் மற்றும் பலர் கலந்து கொள்ளவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# போலியான கியு.ஆர். குறியீடுகளை பயன்படுத்தினால் கடும் நடவடிக்கை

எரிபொருள் பெறுவதற்காக போலியான கியு.ஆர். குறியீடுகளை பயன்படுத்துவோருக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

போலியான கியு.ஆர். குறியீடுகளை பயன்படுத்தி எரிபொருளை பெற சிலர் முயற்சித்த சம்பவங்கள் பதிவாகியுள்ளன என அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

அத்தகைய கியு.ஆர். குறியீடுகளை அடையாளம் காண தகவல் தொழில்நுட்ப முகமையுடன் இணைந்து விசேட வேலைத் திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாகவும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

# பொருளாதார நெருக்கடி காரணமாக நாட்டை விட்டு வெளியேறும் இலங்கையர் எண்ணிக்கை அதிகரிப்பு!

கடுமையான பொருளாதார நெருக்கடி காரணமாக அண்மைக்காலமாக நாட்டை விட்டு வெளியேறும் இலங்கையர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.


சிலர் வேலைவாய்ப்புகளை பெற்றுக் கொள்ளும் நோக்கில் இலங்கையை விட்டு மத்திய கிழக்கு நாடுகள் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளுக்கும் செல்லும் போக்கு அதிகரித்துள்ளது.

அதேபோன்று உயிரைப் பணயம் வைத்து படகு மூலம் ஆஸ்திரேலியா மற்றும் இந்தியாவிற்கு செல்லும் இலங்கையர்களின் எண்ணிக்கையில் அண்மைக்காலமாக பாரியளவில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. கடும் பொருளாதார நெருக்கடி காரணமாகவே ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என அனைவருமே தங்களது உயிர்களைப் பணயம் வைத்து இவ்வாறு சட்டவிரோதமான முறையில் நாட்டை விட்டு வெளியேற முயற்சிக்கின்றனர்.

இதற்கிடையில், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் தகவல்களுக்கு அமைய, இந்த வருடத்தின் ஜுலை மாதத்தின் முதல் வாரம் வரையான காலப்பகுதியில் ஒரு லட்சத்து 50 ஆயிரத்துக்கும் அதிகமான இலங்கையர்கள் வேலை தேடி வேறு நாடுகளுக்குச் சென்றுள்ளனர். இந்த ஆண்டின் ஜுன் மாதத்தில் மாத்திரம் 27 ஆயிரத்து 937 பேர் வேலைகளுக்காக வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர்.

# எலிசபெத் மகாராணி ரணிலுக்கு வாழ்த்து





ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு பிரித்தானியாவின் இரண்டாவது எலிசபெத் மகாராணி தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

இலங்கை மற்றும் பிரித்தானியாவுக்கு இடையிலான நட்புறவைத் தொடர்ந்தும் பேணுவதற்கு எதிர்பார்த்துள்ளேன் என இரண்டாவது எலிசபெத் மகாராணி தனது வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளார்.

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் ஜனாதிபதியாக பதவியேற்ற உங்களுக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். நீங்கள் ஜனாதிபதியாக இருக்கும் போது இரு நாடுகளுக்கும் இடையிலான நட்புறவை தொடர நான் எதிர்பார்க்கிறேன்.

உங்கள் எதிர்கால ஜனாதிபதி வகிபாகம் மற்றும் உங்கள் நாடு மற்றும் மக்களின் வெற்றி மற்றும் மகிழ்ச்சிக்கு எனது நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



## 6 முனைகளில் சீன ராணுவம் போர்ப் பயிற்சி

# தாய்வானில் போர்ப் பதற்றம் அதிகரிப்பு சுற்றி சுற்றி ஏவுகணைகள் வீசுகிறது சீனா



தாய்வானை 6 முனைகளில் சுற்றி வளைத்துள்ள சீன ராணுவம், அதிநவீன ஏவுகணைகளை சரமாரியாக வீசி போர்ப் பயிற்சியில் ஈடுபட்டுள்ளது. அமெரிக்க கடற்படையும் போர்ப் பயிற்சியில் ஈடுபட உள்ளதால் பதற்றம் உச்சமடைந்து உள்ளது. 'தாய்வான் தனி சுதந்திர நாடு இல்லை. தங்களுடன் இருந்து பிரிந்து சென்ற நாடுதான். அது எங்களுக்கு சொந்தமானது' என்று சீனா உரிமை கொண்டாடி வருகிறது. இதை ஏற்க தாய்வான் மறுத்து வருகிறது. அதற்கு ஆதரவாக அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் உள்ளன. இதனால், அமெரிக்கா உட்பட தனது எதிரி நாடுகளின் தலைவர்கள் தாய்வானுக்கு செல்வதற்கு சீனா தடை விதித்துள்ளது.

இதையும் மீறி, கடந்த 3ம் திகதி அமெரிக்க நாடாளுமன்ற சபாநாயகர் நான்சி பெலோசி தாய்வானுக்கு சென்றார்.

அங்கு,தாய்வான் அதிபரை சந்தித்து பேசிய பெலோசி, தென் கொரியா புறப்பட்டு சென்றார். தனது எச்சரிக்கையையும் மீறி தாய்வானுக்கு பெலோசி சென்றமையால், சீனா கோபத்தின் உச்சியில் இருக்கிறது. அதற்கு தகுந்த பதிலடி கொடுக்கப்படும் எனஅமெரிக்காவைமிரட்டியுள்ளது. மேலும்,தாய்வான் மீது பொருளாதார தடைகள் விதித்துள்ளன. அமெரிக்க தூதருக்கு சம்மன் அனுப்பி கண்டித்தது. இதைத் தொடர்ந்து, சீனாவின் முப்படைகளும் தாய்வானை 6 முனைகளில் சுற்றி வளைத்துள்ளன. அதன் போர்க் கப்பல்கள், போர் விமானங்கள், ராணுவ தாங்கிகள் போன்றவை கடுமையான போர்ப் பயிற்சியில் ஈடுபட்டுள்ளன.

மேலும், தாய்வான் வளைகுடாவில் இருந்து வீசப்படும் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளும் தாய்வானின் வான்வெளியில் பறந்து சென்று கடல் இலக்கை தாக்குகின்றன. இதனால், தாய்வான் மக்கள் பீதி அடைந்துள்ளனர். இந்த போர்ப் பயிற்சி வரும் 7ம் திகதி வரை நடத்தப்பட உள்ளது.

இதை போர்ப் பயிற்சி என்று சீனா கூறினாலும்,தாய்வானை தாக்குவதற்கான யுத்தியாகவே உலகளவில் பார்க்கப்படுகிறது. இந்நிலையில், தாய்வானின் தென்மேற்கு கடல் பகுதிக்குள் அமெரிக்க போர்க்கப்பல்கள் நுழைந்துள்ளன. அவையும் போர் பயிற்சி செய்கின்றன என அறிவிக்கப்பட்டு இருந்தாலும், சீனாவுக்கு பதிலடி கொடுக்கவே வந்துள்ளன என கருதப்படுகிறது. இதனால், உச்சக்கட்ட போர் பதற்றம் நிலவுகிறது.

## வாக்குக்காக பொதுக் கழிவறைகளை சுத்தம் செய்யும் வேட்பாளர்கள்!



ஆபிரிக்க பாரான கென்யாவில் வரும் 9ம் திகதி அதிபர் தேர்தலும், நாடாளுமன்ற பொதுத்தேர்தலும், கவர்னர் தேர்தலும் ஒரே நேரத்தில் நடைபெறவுள்ளது.

இந்த தேர்தலில் போட்டியிடுகிற அந்த நாட்டின் அரசியல்வாதிகள் தேர்தல் பிரசாரத்தின்போது தங்களது ஆடம்பர வாழ்க்கையைக் கைவிட்டு விட்டனர். அவர்கள் வாக்காளர்களைக் கவர்ந்து வாக்கு வாங்குவதற்கான பல்வேறு வேலைகளில் இறங்கி உள்ளனர்.

நமது நாட்டில் வேட்பாளர் வாக்காளர்களைக் கவர்வதற்கு டீக்கடையில் டீ தயாரித்தார், புரோட்டா கடையில் புரோட்டா போட்டார் என்றெல்லாம் செய்திகளை அறிந்திருக்கிறோம்.

ஆனால் கென்யாவில் ஒருபடி மேலே போய்விட்டார்கள். அங்கு தேர்தலில் போட்டியிடுகிற வேட்பாளர்கள் துர்நாற்றம் வீசுகிற பொதுக்கழிவறைகளை துடைப்பதுடன், வாளியுடனும் சென்று சுத்தமாய்க் கழுவி விடுகிறார்கள். பெண் வாக்காளர்களை கவர்வதற்காக வீடுகளுக்கு வாக்கு வேட்டையாட செல்கிறபோது வேட்பாளர்கள் காய்கறிகளை நறுக்கித்தருகிறார்கள். நைரோபி கவர்னர் பதவிக்கு போட்டியிடுகிற இகாதே என்ற வேட்பாளர் (படத்தில் இருப்பவர்) பொதுக்கழிவறைகளை சுத்தம் செய்வதுடன், வாக்காளர்களின் கார்களைக் கழுவி விடுகிறாராம். அவர் இரவு விடுதிகளில் மது பரிமாறும் வேலையிலும் ஈடுபடுகின்றமை வாக்காளர்களை வியப்பில் ஆழ்த்தி உள்ளது.

ஆனால் அரசியல்வாதிகளின் இந்த விளம்பர நாடகம், வாக்காளர்களுக்கு நன்றாகத் தெரியும், அவர்கள் இந்த நாடகங்களால் ஈர்க்கப்பட மாட்டார்கள் என்று அரசியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

நைரோபி வாக்காளர் ஆனி வாம்புய் இதுபற்றி சொல்லும்போது, தேர்தல் பிரசாரத்தை தொடங்கும் வரையில் அரசியல்வாதிகளுக்கு சந்தைகள் எங்கே இருக்கின்றன என்பதுகூட தெரியாது. நாங்கள் இந்த நகரத்தில் வாழ்வதற்காக போராடுகிறோம். ஆனால்விலைஉயர்ந்தகடைகளில்பொருள்கள்வாங்குகிறவர்கள், எங்கள் வாக்குகளை விரும்புகிறபோது, எங்களைப் புரிந்துகொள்வது போல நடிக்க வருகிறார்கள் என வேதனை தெரிவித்தார்.

ஆனாலும் அரசியல்வாதிகள் வாக்கு வேட்டையின்போது புதுப்புது உத்திகளை பின்பற்றுவது கென்யாவில் குறையவில்லை என அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.



## நேட்டோ அமைப்பில் சேர்வதற்கு சுவீடனுக்கு செனட் சபை ஒப்புதல்

வடக்கு ஐரோப்பிய நாடுகளான பின்லாந்து, சுவீடன் நேட்டோவில் சேர்க்க, அமெரிக்க செனட் ஆதரவு தெரிவித்துள்ளது. ஐரோப்பிய நாடான உக்ரைன்நேட்டோவில்சேருவதைதடுப்பதற்காக, அந்த நாட்டின் மீது ரஷ்யா போர் தொடுத்துள்ளது. இதைத் தொடர்ந்து, ரஷ்யாவின் அண்டை நாடுகளான பின்லாந்து, சுவீடன் நேட்டோ அமைப்பில் சேருவதற்கு கடந்த மே மாதம் விண்ணப்பித்தன. இதற்கு ரஷ்யா, அதன் ஆதரவு நாடான துருக்கி கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன.

இந்நிலையில், பின்லாந்து, சுவீடன் நேட்டோவில் இணைவதற்கு அமெரிக்க செனட் சபை நேற்று ஒப்புதல் அளித்தது. இதற்கான வாக்கெடுப்பு நேற்று முன்தினம் நடந்தது. இதில், ஆதரவாக 95 வாக்குகளும், எதிர்த்து ஒரு வாக்கும் பதிவானது. இதைத் தொடர்ந்து, 30க்கும் மேற்பட்டவடக்குஅட்லாண்டிக்ராணுவகூட்டமைப்பான நேட்டாவில் பின்லாந்து, சுவீடன் நாடுகள் விரைவில் இணைய உள்ளன. ஏற்கனவே, கனடா உள்ளிட்ட நாடுகள் பின்லாந்து, சுவீடன் நேட்டோவில் இணைய ஆதரவு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 1,200 ஆண்டுகள் பழமையான இந்துக் கோவில் மீண்டும் திறப்பு

பாகிஸ்தானின் லாகூர் நகரில் உள்ள புகழ்பெற்ற அனார்கலி பஜார் அருகே வால்மீகி கோவில் உள்ளது. 1,200 ஆண்டுகள் பழமை வாய்ந்த இந்தகோவில்கடந்த20ஆண்டுகளுக்கு மேலாக கிறிஸ்தவ குடும்பம் ஒன்றின் கட்டுப்பாட்டில் இருந்தது. கோவில் கட்டப்பட்டிருக்கும் நிலம் தங்களுக்கு சொந்தமானது எனக்கூறி ஆக்கிரமித்து வைத்திருந்த நிலையில், இதை எதிர்த்து போராடி வந்த பாகிஸ்தானின் சிறுபான்மை வழிபாட்டு இடங்களை மேற்பார்வையிட்டு வரும் அமைப்பு ஒன்று, கடந்த மாதம் இந்த கோவிலை மீட்டது. இதைத்தொடர்ந்து இந்த கோவில் நேற்று மீண்டும் இந்துக்களின் வழிபாட்டுக்காக திறக்கப்பட்டது. இதன் திறப்பு விழாவில் இந்துக்கள், கிறிஸ்தவர்கள், சீக்கியர்கள் மற்றும் முஸ்லிம் தலைவர்கள் ஏராளமானோர் திரண்டு வந்து திறப்பு விழாவை கொண்டாடினர். 1,200 ஆண்டுகள் பழமை வாய்ந்த கோவில் மீண்டும் திறக்கப்பட்டிருப்பது லாகூர் வாழ் இந்துக்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.



# பன்னிரெண்டாம் ஆண்டில் நினைவஞ்சலி



## சண்முகம் விஸ்வநாதர் முருகேசு

**திதி : 2022.08.05**

தோற்றம்
23 . 12 . 1923

மறைவு
16 . 08 . 2010

'SVM' மூன்றெழுத்தால்
எவ்வுலகிலும் அறியப்பெற்ற ஏந்தலே!
ஆண்டுகள் பன்னிரண்டு ஆனாலும்
ஐயா! உங்கள் நினைவிலேயே நாமின்றும்!

தமிழினத்தின் அடையாளமாய்
காரைநகரின் நிமிர்வாய்
வர்த்தக உலகில் வைரமாய்
அற உலகில் ஆணி வேராய்
ஆன்மீக உலகின் காவலனாய்
உழைப்பில் ஓங்கிய வடிவமாய்
யாழ்ப்பாணத்தின் பொருளாதார அடையாளமாய்
விளங்கியதே SVM முன்றெழுத்தே!

வழமோங்க வாழ வழிசெய்த
வள்ளலே உங்கள் வழி நிற்கின்றோம்!
குடும்பத்தினர்.

உரிமையாளரும் பணியாளர்களும்

**S.V.M (PVT) LTD**
122, Damstreet, Colombo-12.

**S.V.M. DISTRIBUTORS ( PVT) LTD**
160, Standely Road, Jaffna.

**SVMURUGESU**
154, Hospital Road, Jaffna.

**SVM FUEL MART**
173, 175, Palaly Road, Thirunelvely, Jaffna.

**SVMURUGESU ( PVT) LTD**

**S.V.M. ENTERPRISE (PVT) LTD**

# சம்மாந்துறையில் 24 ஆயிரம் ஏக்கரில் விவசாயம் ஆனால் 52 சதவீதக் குடும்பங்கள் அரச உதவியில்!

## வறுமைக்கோட்டுக்குக் கீழ் வாழும் பிரகடனம் குறித்து ஆதங்கம்




(நூருல் ஹுதா உமர்)

'வறுமைக்கோட்டுக்குக் கீழ் வாழ்கின்றோம்' என்ற பிரகடனத்துடன் சம்மாந்துறையில் ஏறத்தாழ 52 சதவீதமான குடும்பங்கள் அரச உதவியிலேயே தங்கி வாழ்கின்றன. இதனை சம்மாந்துறையின் குடிமகனாக ஏற்றுக்கொள்ள முடியாதுள்ளது. என்னுடைய மனதில் நீண்டகாலமாக இருந்துவரும் இந்த மனக்குறையைப் பற்றி சம்மாந்துறை பிரதேச செயலாளரிடம் தெரிவித்திருக்கிறேன். இது வெட்கப்படும் விடயமாகவே உள்ளது. 24 ஆயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட விவசாய காணிகள் உள்ளன. அதில் பயிர்செய்கைகளும் இடம் பெறுகின்றன. ஆனால் 52 சதவீதமான குடும்பங்கள் அரச உதவியிலையே தங்கி வாழ்கின்றன என்றால் அதை எப்படி நியாயப்படுத்த முடியும் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், சம்மாந்துறை பிரதேச சபை தவிசாளருமான ஏ.எம்.எம். நௌசாட் கேள்வியெழுப்பினார்.

சம்மாந்துறை சமூக சேவைகள் மற்றும் வாழ்வாதார மேம்பாட்டு ஒன்றிய அங்குரார்ப்பண நிகழ்வில் பிரதம அதிதியாகயாகக் கலந்துகொண்டு உரையாற்றிய சமயம் அவர் இதனைக் குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியவை வருமாறு:–

மாற்றங்கள் அவரவர் மனதிலிருந்தும், அடிப்படையிலிருந்து வர வேண்டும். அரச அல்லது தனியார் உதவிகள் சரியாக இனங்கண்டு உரியவர்களுக்கு கொண்டு சேர்க்கப்பட வேண்டும். பிழையான தகவல்களை வழங்கி அரச, தனியார் உதவிகள் பெறுவது பாவம் (பிழை) என்ற நிலைக்கு மக்களாகிய நாம் வர வேண்டும். அதைத்தான் இறைவனும் ஏற்றுக்கொள்வான்.

நாட்டின் நிலையை கருத்தில் கொண்டு உணவின்றி இருக்கும் மக்களுக்காக ஏதாவது செய்வது தொடர்பில் சம்மாந்துறை முக்கிய அமைப்புகளுடன் அண்மையில் கலந்துரையாடல் ஒன்றை செய்திருந்தேன். ஆனால் சம்மாந்துறையின் இளைஞர்கள் தாமாக முன்வந்து அந்தப்பணியை வெற்றிகரமாக செய்தார்கள். இதன்போதுசேகரிக்கப்பட்டஅவர்களின்தகவலைகளை அடிப்படையாக கொண்டு இனிவரும் காலங்களில் பல்வேறு வேலைத் திட்டங்களை முன்னெடுக்க முடியும் என்று நம்புகிறேன். சமூக சேவைகள் இறைவனுக்கு பயந்து முன்னெடுக்கப்பட வேண்டும். பயனாளிகளை பகிரங்கப்படுத்தி அவர்களை பொதுவெளியில் சங்கடப்படுத்துவதுஎப்போதும்யாராலும்ஏற்றுக்கொள்ள முடியாதது. இன்று நாம் இருக்கும் நிலைக்கு நாம் எல்லோரும் பொறுப்பாளிகள். வருமானத்தை மீறி செலவு செய்யும் பழக்கத்தினால் தான் இன்று இந்த நிலை உருவாகியுள்ளது. சம்மாந்துறை பிரதேசத்தில் 300 க்கு மேற்பட்ட சமூக சேவைகள் அமைப்புக்கள் இருக்கின்றன. ஆனால் இயங்குநிலையில் உள்ளவை விரல்விட்டு என்னும் அளவுக்கே இருக்கின்றன. இதனை பெரும் குறைபாடாக நான் பார்க்கிறேன். என்னுடையபொதுவாழ்வில்நான்நிறையவிடயங்களை அறிந்துகொண்டு அவற்றினூடாக என்ன வழிகாட்டல்கள் இருக்கின்றன என்று பார்க்கிறேன்.

சமூக சேவைகள் மூலம் சமூகம் கட்டியெழுப்பட வேண்டும். இப்போது அரசியல் எனும் சொல் மக்களுக்கு மிகவும் வெறுப்பாக மாறியுள்ளது. சமூக சேவை அமைப்புக்களுடன் இணைந்து பிரதேசத்தின் கட்டமைப்பில் மேம்பாட்டை உருவாக்க எப்போதும் தயாராக இருக்கிறோம்.– என்றார்.

# கிழக்கில் பல்கலைக்குத் தெரிவாகும் வறிய மாணவருக்கு உதவித் திட்டம்!





(கல்லடி நிருபர்)

கிழக்கு மாகாணத்தில் வாழ்வாதார அபிவிருத்தி மற்றும் கல்வி முன்னேற்றத்திற்கான செயற்பாடுகளை முன்னெடுத்துவரும் 'சுவிஸ் உதயம்' அமைப்பு, பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான உதவிகள் வழங்குவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

வறிய நிலையிலுள்ள குடும்பங்களிலிருந்து பல்கலைக்கழகத்திற்கு தெரிவுசெய்யப்பட்ட மாண வர்களின் தடையின்றிய கல்வி நடவடிக்கையினை நோக்காக கொண்டு இந்த உதவிகள் வழங்கப்படவுள்ளன.

இது தொடர்பான நிகழ்வு மட்டு. ஊடக அமையத்தில் சுவிஸ் உதயம் அமைப்பின் கிழக்கு மாகாண கிளைத் தலைவரும் முன்னாள் பிரதி கல்வி பணிப்பாளருமான மு.விமலநாதன் தலைமையில்கடந்தசெவ்வாய்க்கிழமைநடைபெற்றது.

இந்த நிகழ்வில் சுவிஸ் உதயம் அமைப்பின் தாய்ச்சங்கத்தின் பொருளாளரும் சமூக சேவையாளருமான க.துரைநாயகம், சுவிஸ் உதயம் அமைப்பின் கிழக்கு மாகாண கிளை செயலாளர் திருமதி ரொமிலா செங்கமலன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

மட்டக்களப்பிலிருந்து இலங்கையின் பல பாகங்களிலும் உள்ள பல்கலைக்கழகத்திற்கு தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கான உதவிகள் அமெரிக்காவில் உள்ள மண்டூரை சேர்ந்த பொறியியலாளர் க.சிவகுமாரன் மூலம் வருடாந்தம் வழங்கப்படவுள்ளன.

இதன்கீழ் முதல்கட்டமாக மட்டக்களப்பு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலுமிருந்து தெரிவுசெய்யப்பட்ட பத்து மாணவர்களுக்கான உதவிகள் வழங்கப்படவுள்ளன.

மாதாந்தம் அவர்களின் தேவையினை பூர்த்தி செய்யக்கூடிய வகையில் ஒவ்வொருவருக்கும் பத்தாயிரம் ரூபா வழங்கப்படவுள்ளதாக க.துரைநாயகம் தெரிவித்தார்.





# நேற்று கதிர்காமத்தில் 10 ஆயிரம் பேருக்கு சித்தர்கள் குரல் அமைப்பினர் அன்னதானம்

(காரைதீவு நிருபர் சகா)

'சித்தர்கள் குரல்' அமைப்பினால் பத்தாயிரம் பேருக்கு அன்னதானம் நேற்று வியாழக்கிழமை கதிர்காமத்தில் வழங்கப் பெற்றுள்ளது.

இந்த அன்னதானத்தை சித்தர்கள் குரல் அமைப்பினர் அதன் ஸ்தாந்த் தலைவர் ஸ்ரீ சிவசங்கர் ஜி தலைமையில் அங்கு நடத்தினார்கள். சித்தர்கள் குரல் அமைப்பின் தலைவர் ஆதித்தன், துணைத் தலைவர் மனோகரன், ஸ்தாபக தலைவர் சங்கர் ஜி அவர்களின் நிதி உதவியோடு மற்றும் மகேஸ்வரன், தியாகராஜா, ரினோன், விவே, சில்வா ஆகியோரின் துணையுடன் அங்கே அன்னதானம் வழங்கப்பட்டது.

கதிர்காம பஸ்நாயக்க நிலமே அனுமதியோடு, வரலாற்றின் முதல் தடவையாக கதிர்காம ஆலயத்திற்கு முன்பாக உள்ள பிரதான மண்டபத்தில் சித்தர்கள் அமைப்பு பத்தாயிரம் பேருக்கு அன்னதானம் வழங்கி வைக்கப்பட்டது.

# பூவல் தோண்டி குடிதண்ணீர் எடுக்கும் கதிர்காம பக்தர்கள்

கதிர்காம பாதயாத்திரை காட்டுப் பாதையின் போது சுத்தமான குடி தண்ணீர் என்பது எப்போதும் நெருக்கடியான விவகாரமே.

ஆனால் வியாழ ஆற்றின் படுக்கையிலே மாதுக்கள் பூவல் வெட்டி சுத்தமான குடிதண்ணீர் பெறுவார்கள். அந்தக் காட்சிகள் இவை.

(படங்கள்: காரைதீவு நிருபர் சகா).





காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# கேரளாவில் தென்மேற்கு பருவமழை தீவிரம் 7 ஆயிரம் பேர் நிவாரண முகாம்களில் தஞ்சம்



கேரளாவில் தென்மேற்கு பருவமழை தீவிரம் அடைந்துள்ளது. மத்திய மற்றும் வடக்கு கேரளா பகுதிகளில் தொடர்ந்து பெய்து வரும் மழையால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டு உள்ளது. தற்போது பெய்து வரும் மழை மேலும் 3 நாள்களுக்கு நீடிக்கும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் எச்சரித்து உள்ளது.

இதன் காரணமாக திருச்சூர், இடுக்கி, பத்தினம் திட்டா, கோட்டயம், ஆலப்புழா மற்றும் பாலக்காடு ஆகிய 6 மாவட்டங்களுக்கு இன்றும் ஆரஞ்ச் எச்சரிக்கை விடுக்கப்பட்டு உள்ளது. இம்மாவட்டங்களில் இயல்பை காட்டிலும் அதிக மழை பெய்யும் என்று கூறப்பட்டிருப்பதால் தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்ல வேண்டும் என அதிகாரிகள் அறிவித்து உள்ளனர். மழை அதிகம் பெய்யும் பகுதிகளில் தேசிய பேரிடர் மீட்பு படையினர் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். இதற்காக 9 குழுக்கள் தயார் நிலையில் உள்ளன. இவர்களுடன் மாநில பேரிடர் மீட்புக் குழுவினரும் இணைந்து செயல்பட்டு வருகிறார்கள்.

இவர்கள் மாநிலத்தில் வெள்ளம் சூழ்ந்த பகுதிகளில் வசிக்கும் மக்களை மீட்டு நிவாரண முகாம்களுக்கு அழைத்து வருகிறார்கள். மழை வெள்ளத்தில் சிக்கி இதுவரை சுமார் 22 பேர் பலியாகி உள்ளனர்.

250க்கும் மேற்பட்ட வீடுகள் இடிந்துள்ளன. பல இடங்களில் நிலச்சரிவும் ஏற்பட்டுள்ளது. மழையால் வீடுகளை இழந்தவர்களுக்காக மாநிலம் முழுவதும் 221 நிவாரண முகாம்கள் திறக்கப்பட்டு உள்ளன. இவற்றில் இதுவரை பெண்கள், குழந்தைகள் உள்பட சுமார் 7 ஆயிரம் பேர் தஞ்சம் அடைந்துள்ளனர். அவர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை மாநில அரசு செய்து கொடுத்துள்ளது. கேரளாவின் மேற்கு தொர்ச்சி மலையில் பெய்து வரும் மழை காரணமாக காட்டாறுகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது.

அணைகளுக்கு வரும் நீரின் அளவு அதிகரித்து வருவதால் அணைகளின் நீர்மட்டம் கிடுகிடுவென உயர்ந்து வருகிறது. இடுக்கி அணை, பெரிங்கல்குத்து அணை அணைகளின் நீர்மட்டத்தை அதிகாரிகள் 24 மணிநேரமும் கண்காணித்து வருகிறார்கள். இந்த அணைகளில் இருந்து தற்போது உபரி நீர் திறக்கப்பட்டு உள்ளது. இதனால் ஆறுகளில் வெள்ளம் கரை புரண்டு ஓடுகிறது. கேரளாவில் மழை அதிகம் பெய்யும் என்று எச்சரிக்கை விடப்பட்ட மாவட்டங்களுக்கு அந்தந்த மாவட்ட கலெக்டர்கள் விடுமுறை அளிக்க மாநில அரசு அறிவுறுத்தி இருந்தது.

அதன்படி ஆலப்புழா, இடுக்கி, கோட்டயம் மாவட்டங்களுக்கு நேற்று விடுமுறை விடப்படுவதாக நேற்று முன்தினம் இரவே அந்தந்த மாவட்ட கலெக்டர்கள் அறிவித்து விட்டனர். ஆனால் எர்ணாகுளம் மாவட்ட கலெக்டர் நேற்று காலையில் தான் இந்த அறிவிப்பை வெளியிட்டார். இந்த தகவல் மக்களை சென்றடையும் முன்பு பெரும்பாலான பள்ளி மாணவ, மாணவிகள் பலரும் பள்ளிக்கு சென்று விட்டனர்.

இதற்கு சமூக ஆர்வலர்கள் மற்றும் பெற்றோர் அதிருப்தி தெரிவித்தனர். கலெக்டரின் நடவடிக்கையையும் விமர்சித்து இருந்தனர். இந்த நிலையில் எர்ணாகுளத்தை சேர்ந்த வக்கீல் ஒருவர் இதுதொடர்பாக கேரள ஐகோர்ட்டில் வழக்கு தொடர்ந்துள்ளார். அதில் தாமதமாக விடுமுறை வழங்கிய எர்ணாகுளம் கலெக்டரிடம் விளக்கம் கேட்க வேண்டும், விடுமுறை அறிவிப்புக்கான சரியான வழிகாட்டு நெறிமுறைகளை வகுக்க வேண்டும் என அந்த மனுவில் கூறியுள்ளார்.

# பத்ரா சால் முறைகேடு வழக்கில் சஞ்சய் ராவத்திடம் விசாரணை



மும்பையில் 'பத்ரா சால்' என்ற குடிசை சீரமைப்பு திட்டத்தில் ரூ.1,000 கோடிக்கும் மேல் முறைகேடு நடந்ததாக கூறப்படும் வழக்கில் சிவசேனா தலைமை செய்தி தொடர்பாளர் சஞ்சய் ராவத் எம்.பிக்கு நெருக்கமானவராக கருதப்படும் பிரவின் ராவத் கடந்த பெப்ரவரி மாதம் அமுலாக்கத்துறையால் கைது செய்யப்பட்டார். இந்த முறைகேட்டில் நடந்த சட்டவிரோத பணப்பரிமாற்றம் தொடர்பாக சஞ்சய் ராவத்தை விசாரணைக்கு அழைத்து சென்ற அமுலாக்கத்துறை அதிகாரிகள், அவரை கடந்த 1ம் திகதி அதிகாலையில் அதிரடியாக கைது செய்தனர். சஞ்சய் ராவத்தை பொலிஸார் சிறப்பு கோர்ட்டில் ஆஜர்படுத்தியபோது, அவர் மற்றும் அவரது குடும்பத்தினர் பத்ரா சால் முறைகேடு மூலம் ரூ.1 கோடியே 6 லட்சத்தை பெற்றார் என அமுலாக்கத்துறை குற்றம் சாட்டியது. இதையடுத்து அவரை 4ம் திகதி வரை அமுலாக்கத்துறை காவலில் ஒப்படைத்து கோர்ட்டு உத்தரவிட்டது. சஞ்சய் ராவத்தின் காவல் முடிவடைந்த நிலையில் நேற்று மீண்டும் கோர்ட்டில் ஆஜர்படுத்தப்பட்டார். அப்போது அரசு தரப்பில் ஆஜரான வக்கீல், விசாரணையின்போது கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் மூலம், அலிபாக்கில் உள்ள சொத்துகளை சஞ்சய் ராவத் வாங்கியதில் கணிசமான பணப் பரிவர்த்தனை நடந்திருப்பது தெரியவந்துள்ளதாகவும், எனவே காவலை நீடிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். அந்த ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நபர்களின் விவரங்கள் விசாரிக்கப்பட்டு வருகின்றன. விசாரணைக்கு ஒத்துழைக்க அவர்களுக்கு சம்மன் அனுப்பப்பட்டுள்ளது என்றார். மேலும் சஞ்சய் ராவத் குற்றத்தின் மூலம் கிடைத்த வருமானத்தில் ரூ.1.17 கோடியை அலிபாக் சொத்துக்களுக்காக பயன்படுத்தி உள்ளார். இதற்கு முன்பு விசாரணையில் வெளிவந்த ரூ.1.06 கோடியை அவர் கூடுதலாக பயன்படுத்தி உள்ளார். சஞ்சய் ராவத்தின் மனைவி வர்ஷாவின் வங்கிக் கணக்கில் ரூ.1.08 கோடி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. வர்ஷா ராவத்திடம் அமுலாக்கத்துறை விசாரணைக்காக சம்மன் அனுப்பப்பட்டுள்ளது. இருவரிடமும் ஒன்றாக விசாரணை நடத்தப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

இருதரப்பு வாதத்தையும் கேட்ட நீதிபதி, மேலும் சில பணப்பரிமாற்றம் குறித்த தகவல் வெளிவந்து இருப்பது விசாரணையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் என்று குறிப்பிட்டார். மேலும் சஞ்சய் ராவத்தின் அமுலாக்கத்துறை காவலை வருகிற 8ம் திகதி வரை நீடித்து கோர்ட்டு உத்தரவிட்டது. முன்னதாக அமுலாக்கத்துறை காவலின்போது தன்னை காற்றோட்டம் இல்லாத அறையில் வைத்து இருந்ததாக நீதிபதியிடம் சஞ்சய் ராவத் தெரிவித்தார். ஆனால் இதை மறுத்த அமலாக்கத்துறை வக்கீல், ஏ.சி. வசதி இருந்ததால் அறையின் ஜன்னல் அடைக்கப்பட்டு இருந்தது என்று தெரிவித்தார்.

இதற்கு பதிலளித்த சஞ்சய் ராவத், எனது உடல்நல பிரச்சினையால் ஏ.சி. வசதியை என்னால் பயன்படுத்த முடியாது என்றார். இதையடுத்து காற்றோட்டமான அறை வசதியை உறுதிப்படுத்த வேண்டும் என்று அமுலாக்கத்துறைக்கு நீதிபதி உத்தரவிட்டார். இதற்கிடையே சஞ்சய் ராவத்தின் மனைவி வர்ஷா இன்று விசாரணைக்காக அமுலாக்கத்துறை முன் ஆஜராகலாம் என்று கூறப்படுகிறது. இந்த வழக்கில் சஞ்சய் ராவத்தின் மனைவிக்கும் சம்மன் அனுப்பியிருப்பது பரபரப்பை ஏற்படுத்தி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஷிண்டே மனு மீது அவசர நடவடிக்கை எடுக்கத் தடை தேர்தல் ஆணையத்துக்கு சுப்ரீம் கோர்ட்டு உத்தரவு



கடந்த ஜூன் மாத இறுதியில் நடந்த மகாராஷ்டிரா அரசியல் சூறாவளியால் சிவசேனாவில் பிளவு ஏற்பட்டது. சிவசேனாவை சேர்ந்த ஏக்நாத் ஷிண்டே 40 ஆதரவு எம்.எல்.ஏக்களுடன் தனி அணியை உருவாக்கினார். இதனால் உத்தவ் தாக்கரே தலைமையில் செயல்பட்டு வந்த சிவசேனா– தேசியவாத காங்கிரஸ்– காங்கிரஸ் கூட்டணி அரசு கவிழ்ந்தது. மேலும் பா.ஜனதாவுடன் சேர்ந்து ஏக்நாத் ஷிண்டே கூட்டணி ஆட்சி அமைத்துள்ளார்.

இந்தநிலையில் மகாராஷ்டிராவில் நடந்த அரசியல் நெருக்கடிகள் தொடர்பாக உத்தவ் தாக்கரே மற்றும் ஏக்நாத் ஷிண்டே தரப்பினர் சுப்ரீம் கோர்ட்டில் மனுக்களை தாக்கல் செய்தனர். குறிப்பாக ஏக்நாத் ஷிண்டே அணியினர் தாங்கள் தான் உண்மையான சிவசேனா என்றும், கட்சியின் 'வில் அம்பு' சின்னத்தை தங்களுக்கு ஒதுக்க வேண்டும் என்றும் இந்திய தேர்தல் ஆணையத்துக்கு அனுப்பிய கடிதத்தை அடுத்து, இரு தரப்பினரும் வருகிற 8ம் திகதிக்குள் உரிய ஆவணங்களை தாக்கல் செய்ய வேண்டும் என்று தேர்தல் ஆணையம் உத்தரவிட்டதற்கு எதிராகவும் உத்தவ் தாக்கரே தரப்பு சுப்ரீம் கோர்ட்டில் மனு தாக்கல் செய்திருந்தது. இந்த மனுக்களை தலைமை நீதிபதி என்.வி.ரமணா தலைமையிலான அமர்வு விசாரித்து வருகிறது. நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தபோது, ஷிண்டே தரப்பு சார்பில் ஆஜரான மூத்த வக்கீல் ஹரிஷ் சால்வே, கட்சி தாவல் தடை சட்டம், கருத்து வேறுபாடுகளுக்கு எதிரான சட்டமாக இருக்க முடியாது. தகுதி நீக்கம் கண்டறியப்படும் வரை, சட்டத்திற்கு புறம்பான செயல் எதுவும் இல்லை என்று வாதிட்டார்.

உத்தவ் தாக்கரே தரப்பில் ஆஜரான மூத்த வக்கீல் கபில் சிபல், 40 அதிருப்தி எம்.எல்.ஏக்களும் தங்கள் நடத்தை காரணமாக தகுதி நீக்கம் செய்யப்படும் நிலையில் உள்ளனர். அந்த சந்தர்ப்பத்தில் அவர்கள் தங்களை உண்மையான சிவசேனா என்று எப்படி உரிமை கோர முடியும்? ஏக்நாத் ஷிண்டே தலைமையிலான எம்.எல்.ஏக்கள் வேறு அரசியல் கட்சியுடன் இணைவதன் மூலம் மட்டுமே அரசியல் சாசனத்தின் 10வது அட்டவணையின் கீழ் தகுதி நீக்கத்தில் இருந்து தங்களை காப்பாற்றிக்கொள்ள முடியும் என்றார். தேர்தல் ஆணையமும் தனது தரப்பு வாதத்தை முன்வைத்தது. அனைத்து தரப்பு வாதத்தையும் பதிவு செய்து கொண்ட நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவு வருமாறு:– மகாராஷ்டிரா அரசியல் குழப்பநிலை தொடர்புடைய மனுக்களை அரசியலமைப்பு சாசன அமர்வுக்கு மாற்றுவதா?, வேண்டாமா? என்பது குறித்த உத்தரவு வருகிற திங்கட்கிழமை பிறப்பிக்கப்படும். அதுவரை தங்களையே உண்மையான சிவசேனா என அறிவிக்க கோரும் ஏக்நாத் ஷிண்டேவின் மனு மீது எந்தவித அவசர நடவடிக்கையையும் தேர்தல் ஆணையம் எடுக்கக்கூடாது. ஏக்நாத் ஷிண்டேவின் மனுவுக்கு பதிலளிக்க உத்தவ் தாக்கரே தரப்பு அவகாசம் கோரினால் அதை தேர்தல் ஆணையம் பரிசீலிக்க வேண்டும். இவ்வாறு நீதிபதிகள் உத்தரவிட்டனர். சுப்ரீம் கோர்ட்டின் இந்த அதிரடி உத்தரவு ஷிண்டே அணிக்கு பின்னடைவாக அமைந்துள்ளது.

# மத்திய ரயில்வேயில் நான்கு மாதத்தில் மட்டும் ஓசிப்பயணம் செய்தவர்களிடம் ரூ.126 கோடி வசூல்

மத்திய ரயில்வேயில் பயணிகள் டிக்கெட் இன்றி பயணம் செய்வதை தடுக்க ரயில் நிலையங்கள் தீவிரமாக கண்காணிக்கப்படுகிறது. ரயில் நிலையங்கள் மட்டுமன்றி டிக்கெட் பரிசோதகர்கள் மின்சார ரயில்களிலும் சோதனை நடத்தி வருகின்றனர். இதன் காரணமாக கடந்த ஏப்ரல் முதல் ஜூலை வரையிலான 4 மாதங்களில் ரயிலில் டிக்கெட் இல்லாமல் ஓசி பயணம் செய்த 18 லட்சத்து 37 ஆயிரம் சிக்கினர். அவர்களிடம் இருந்து ரூ.126.18 கோடி அபராதமாக வசூலிக்கப்பட்டுள்ளது. இதில் ஜூலை மாதம் மட்டும் ஓசிப்பயணம் செய்த 3.27 லட்சம் பேரிடம் இருந்து ரூ.20 கோடியே 66 லட்சம் கிடைத்து உள்ளது. கடந்த ஆண்டு ஏப்ரல் முதல் ஜூலை வரையிலான 4 மாதத்தில் டிக்கெட் இன்றி பயணம் செய்த 71/2 லட்சம் பேர் பிடிபட்டு, அவர்களிடம் இருந்து ரூ.45.06 கோடி அபராதம் வசூலிக்கப்பட்டு இருந்தது. எனவே கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் நடப்பாண்டில் 180 சதவீதம் அதிக அபராதம் வசூலிக்கப்பட்டுள்ளது. இந்த தகவலை மத்திய ரயில்வே வெளியிட்டுள்ளது.

# கிண்ணியா நெடுந்தீவுப் பகுதியில் குழாய் நீர் இணைப்பு வழங்கல்





(ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்டம், கிண்ணியா பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட நெடுந்தீவு பிரதேசத்தில் நீண்ட கால கோரிக்கைகளில் ஒன்றாக இருந்த பிரதான நீர் குழாய் இணைப்புடன் சேர்த்து சமுர்த்தி பயனாளிகள் மற்றும் சமுர்த்தி அற்ற இருபத்தியைந்து குடும்பங்களுக்கான குடிதண்ணீர் இணைப்பு வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் நெடுந்தீவு ஐக்கிய மக்கள் சக்தியின் பொறுப்பாளர் சஹ்ஜீர் தலைமையில் இடம்பெற்றது.

இதில் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் கலந்து கொண்டு இதனை வழங்கி வைத்தார். இதன்போது பிரதேச இளைஞர் கழகத்துக்கான விளையாட்டு உபகரணங்களும், கிராமிய அபிவிருத்தி சங்கத்துக்கான புல்வெட்டும் இயந்திரமும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் ரஹீம் மௌலவி (ஆசிரியர் ), சிராஜ்(தேசிய இளைஞர் படையணி )உள்ளிட்ட ஊர் முக்கியஸ்தர்கள் பலர் கலந்துகொண்டனர்.

## 850 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 800 பேர் கண்டி மாவட்டத்தில் அனர்த்தத்தினால் பாதிப்பு!

### அனர்த்த முகாமைத்துவ நிலைய உதவிப் பணிப்பாளர் தகவல்

கண்டி மாவட்டத்தில் 850 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 800 பேர் இதுவரை இயற்கை அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்டுள்ளனர் என கண்டி மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலைய உதவிப் பணிப்பாளர் தேசப்பிரிய பண்டார தெரிவித்தார்.

அவர் கண்டியில் வைத்து இது பற்றி மேலும் தெரிவிக்கையில் –

24 மணித்தியாலங்களில் நாட்டில் நாலா பக்கத்திலும் கடும் மழை பெய்த அதே நேரம் கண்டி மாவட்டத்தில் பல இடங்களிலும் 100 மில்லி மீற்றருக்கும் அதிகமான மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது. கண்டி மாவட்டத்திலுள்ள 14 பிரதேச செயலாளர்கள் பிரிவுகளில் மேற்படி சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

மேலும், தொலுவ, பஸ்பாகே கோரளை, உடபலாத்த, தெல்தொட்டை, மெததும்பறை மற்றும் கங்க இஹலகோரளை போன்ற பிரதேச செயலாளர் பிரிவுகளில் மிக அவதானமாக உள்ளோம். – என்றார்.

## நாடாளுமன்ற பாதுகாப்புச் செயற்பாட்டில் இருந்த ட்ரோன் விபத்துக்குள்ளானது!

இலங்கை நாடாளுமன்றத்தின் பாதுகாப்பு கண்காணிப்பு செயற்பாட்டில் பயன்படுத்தப்பட்ட ட்ரோன் ஒன்று விபத்துக்குள்ளானது.

புதன்கிழமை இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளதாக விமானப்படை பேச்சாளர் குரூப் கப்டன் துஷான் விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் நாடாளுமன்றத்தைச் சுற்றியுள்ள பகுதிகளைக் கண்காணிக்கவென விமானப்படையினரால் ட்ரோன் விமானங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

இந்நிலையில் நாடாளுமன்றத்தின் புதிய அமர்வு நடைபெற்ற புதன்கிழமை, பாதுகாப்புக் கண்காணிப்பு பணிகளில் பறக்கவிடப்பட்ட ட்ரோன் விமானம் ஒன்று இயந்திரக் கோளாறு காரணமாக விபத்துக்குள்ளாகியுள்ளது.

தியவன்னா ஆற்றில் விழுந்துள்ள குறித்த ட்ரோன் கருவியை கண்டுபிடிக்க கடற்படை சுழியோடுகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இதற்கிடையே வேறு தரப்பின் ட்ரோன் கமராக்கள் நாடாளுமன்றத்தின் மேலாக பறக்க விடுவதைத் தடுப்பதற்கான பொறிமுறை ஒன்றையும் விமானப்படையினர் நிறுவியுள்ளனர்.

## அமைச்சர்களுக்கு இணையான அதிகாரம் தம்மிக்க பெரேராவிற்கு முக்கிய பொறுப்பு?

தற்போதைய பொருளாதார வீழ்ச்சியிலிருந்து நாட்டை மீட்பதற்காக உருவாக்கப்படும் பொருளாதார அபிவிருத்திக் குழுவின் தலைவராக தம்மிக்க பெரேரா நியமிக்கப்படவுள்ளார் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

நாட்டின் பொருளாதாரத்தின் அனைத்து அம்சங்களையும் கண்காணித்தல் மற்றும் மேற்பார்வை செய்தல், பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான கொள்கைகளை வகுத்தல், டொலர்களை ஈட்டுவதற்கான கொள்கைகளை வகுத்தல் போன்ற பல பொறுப்புகள் இந்த குழுவிற்கு வழங்கப்படவுள்ளன.

அத்துடன், அமைச்சர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு சமமாக பொருளாதார அபிவிருத்திக் குழுவின் தலைவருக்கும் அதிகாரங்கள் வழங்கப்படவுள்ளன எனக் கூறப்படுகின்றது.

பஸில் ராஜபக்ஷவின் இராஜினாமாவால் ஏற்பட்ட வெற்றிடத்துக்கு தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக தம்மிக்க பெரேரா நியமிக்கப்பட்டார்.

அதனைத் தொடர்ந்து அமைச்சராக நியமிக்கப்பட்ட அவர், சில தினங்களிலேயே அமைச்சர் பதவியை இராஜினாமா செய்திருந்தார்.

அத்துடன், தேசியப் பட்டியல் உறுப்பினர் பதவியில் இருந்து தம்மிக்க பெரேரா விலகவுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியிருந்தன.

எனினும், நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை விட்டு விலக வேண்டாம் என தம்மிக்க பெரேராவிற்கு, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆலோசனை வழங்கியிருந்தார் எனவும் கூறப்பட்டது.

மேலும் எதிர்வரும் சில தினங்களில் தம்மிக்க பெரேராவிற்கு முக்கிய அமைச்சு பதவி வழங்கப்படவுள்ளதாகவும் தகவல்கள் முன்னர் வெளியாகியிருந்தன.

இந்நிலையிலேயே தற்போது அமைச்சர்களுக்கு இணையான அதிகாரங்களுடன் தம்மிக்க பெரேராவிற்கு முக்கிய குழுவொன்றின் தலைவர் பதவி வழங்கப்படவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

## இந்து சமுத்திரப் ........

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

பரப்புக்குள் இலங்கையும் உள்ளடங்குகின்றது. இந்தியாவின் தென் மாநிலங்களில் அணுசக்தி நிறுவனங்களும், செய்மதி ஏவுதளங்களும் இந்தியாவின் பாதுகாப்புடன் தொடர்புடைய நிறுவனங்களும் உள்ளன. இத்தகைய ஒரு சூழ்நிலையில், சீன உளவுக் கப்பலின் வருகை என்பது இந்தியாவுக்கு அச்சுறுத்தல் என்பதற்கு அப்பால் இந்துசமுத்திரப் பிராந்தியத்தின் அமைதிக்கும் அச்சுறுத்தலாக அமையும்.

இது ஒருபுறமிருக்க. இந்து சமுத்திரப் பிராந்தியமானது வல்லரசுகளின் போட்டியிலிருந்து விடுபட்டு, ஓர் அமைதிப் பிராந்தியமாக இருக்க வேண்டும் என்பதில் நேருவும் சாஸ்திரியும் இந்திராகாந்தியும் சிரத்தையுடன் இருந்தார்கள். அதன் காரணமாகவே அவர்கள் அமெரிக்க சோவியத் வல்லரசுகளுடன் இணையாமல் அணிசேரா நாடுகளின் கூட்டு ஒன்றை உருவாக்கினார்கள். சுதந்திர இந்தியாவின் முதலாவது பிரதமரான நேரு, அணிசேரா நாடுகளின் ஆரம்பகர்த்தாக்களுள் ஒருவராக இருந்து அணிசேரா நாடுகளின் அணியை உருவாக்கினார்.

தற்போது, இந்து சமுத்திரப் பிராந்தியமானது அவ்வாறான அமைதிப் பிரதேசம் என்ற நிலையிலிருந்து அமெரிக்க சீன வல்லரசுகளின் வல்லாதிக்கப் போட்டியின் களமாக மாறுகின்றதா என்ற அச்சம் எழுகின்றது. 2016ஆம் ஆண்டு சீனாவின் நீர்மூழ்கிக் கப்பல் இலங்கைக்கு வருகை தந்தபோது இந்தியா தனது கவலையைத் தெரிவித்திருந்தது. அன்று இலங்கை அரசு இந்தியாவின் கவலைக்கு உரிய விதத்தில் பதிலளிக்கவில்லை. இப்போதும் சீனா தனது உளவு கப்பலை இலங்கைக்குள் நங்கூரமிடத் திட்டமிட்டுள்ளது. இதற்கும் இந்தியா தனது ஆழ்ந்த கவலையை வெளியிட்டுள்ளது. ஆனால், இலங்கை அரசு அந்தக் கப்பல் எரிபொருள் நிரப்புவதற்காகவே வருகை தருவதாகக் கூறுகின்றது. இலங்கையின் இத்தகைய அணுகுமுறைகளைப் பார்க்கின்றபோது இந்து சமுத்திரத்தின் அமைதியின்மைக்கு இலங்கையும் துணைபோகின்றதோ என்ற கேள்வி பலமாக எழுகின்றது.

இலங்கையில் ஏற்படும் இனமுரண்பாடுகள் மற்றும் இலங்கை ஏனைய வல்லாதிக்க சக்திகளின் பிடிக்கு உட்படுவது என்பது இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் அமைதிக்குப் பங்கம் விளைவிக்கும் என்பதில் இந்தியா எப்போதும் கரிசனை கொண்டு செயற்பட்டுள்ளது. அதன் காரணமாகவே, இலங்கையில் இனமுரண்பாடுகள் தீர்க்கப்பட வேண்டும் என்பதிலும் இலங்கை ஏனைய வல்லாதிக்க சக்திகளின் ஆளுமைக்குள் செல்லக்கூடாது என்பதிலும் இந்தியா கரிசனையுடன் செயற்பட்டு வந்திருக்கின்றது. ஆனால், அண்மைக்கால இலங்கை அரசின் நடவடிக்கைகளானது இந்தியாவின் இந்த முயற்சிகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்திவிடுமோ என அஞ்சுகின்றோம்.

இலங்கையின் தவறான வெளியுறவுக் கொள்கைகள் தமிழ் மக்களுக்கு ஏற்புடையதல்ல என்பதையும் நாங்கள் வலியுறுத்திக் கூற விரும்புகின்றோம். எனவே, இலங்கை அரசின் வெளிநாட்டுக் கொள்கையில் காத்திரமான மாற்றங்கள் தேவை எனவும், இந்து சமுத்திரப் பிராந்தியம் அமைதிப் பிராந்தியமாகத் திகழ வேண்டும் என்பதற்கு முதன்மை ஸ்தானம் கொடுக்க வேண்டும் என்பதிலும் இலங்கை கவனத்துடன் செயற்பட வேண்டும் எனவும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி கோருகின்றது – என்றுள்ளது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 05.08.2022இல் வெளியிடப்பெற்றது.